**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.48/2021- DW-1**

| | |
|---|---|
| Name | திருமதி.ஆகிலா பேகம் |
| Husband Name | திரு.முகமது ரஹமான் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 03.11.2025.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–**

நான் இளநிலை கணினி அறிவியல் பட்டப்படிப்பு படித்துள்ளேன். இந்த வழக்கு சம்மந்தப்பட்ட விவரங்கள் என்னை விட என் தாயாருக்கு தான் நன்கு தெரியும் என்றால் சரிதான். இராணிப்பேட்டை முத்துக்கடையில் கிரேட் பிரியாணி என்ற பெயரில் என் தந்தை பிரியாணி கடை நடத்தி வந்தார் என்றால் சிறிய அளவில் என் அப்பாவும், சித்தாப்பாவும் சேர்ந்து நடத்தி வந்தார்கள். தற்போது என் சித்தப்பா அந்தக் கடையை நடத்தி வருகிறார். அந்தக் கடையில் வந்த வருமானத்தை வைத்து தான் என் தந்தை வழக்கு சொத்தை கிரையம் வாங்கியிருக்கிறார் என்றால் சரியல்ல. என் தந்தை உயிரோடு இருக்கும் வரை வழக்கு சொத்து சம்மந்தமாக எந்தவித ஏற்பாடும் அல்லது ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். பி.சா.ஆ.3 கணக்கு புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள கணக்குள் தொடர்புடைய பில்கள், ரசீதுகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என் தந்தையின் கையெழுத்து தான். என்னிடம் காண்பிக்கப்படும் பி.சா.ஆ.3 கணக்கு புத்தகத்தில் 18.10.2008 தேதியில் எழுதப்பட்டுள்ள கணக்குகளுக்கு கீழே போடப்பட்டுள்ள கையொப்பம் என் தந்தையின் கையொப்பம் தான். பி.சா.ஆ.3 கணக்கு புத்தகத்தில் உள்ள அந்த கையொப்பம் என் தந்தையின் கையொப்பம் இல்லை என்றாலும், அந்த கையொப்பம் வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள என் தந்தையின் கையொப்பத்திற்கு மாறுபட்டுள்ளது என்றாலும் சரியல்ல. பி.சா.ஆ.3 கணக்கு புத்தகத்தில் உள்ள என் தந்தையின் கையொப்பத்தை கையெழுத்து நிபுணருக்கு அனுப்பினால் அதன் உண்மை தன்மையை தெரிந்துகொள்ளலாம் என்றால் எனக்கு அதில் ஆட்சேபனை இல்லை. பி.சா.ஆ.3 கணக்கு புத்தகத்தை இந்த வழக்கிற்காக நான் தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.2 ஆவணத்தில் என் தாயாரின் பெயர் அடித்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.2 ஆவணம் உண்மையான ஆவணமல்ல என்றால் சரியல்ல. என் தந்தையின் வாரிசு சான்றிதழில் வாதிகளின் பெயரை சேர்க்காததால் சார் ஆட்சியர் அந்த வாரிசு சான்றிதழை ரத்து செய்துவிட்டார் என்றால் சரிதான்.

சரியாக விசாரணை செய்யாமல் ரத்து செய்துவிட்டார். சார் ஆட்சியரின் உத்தரவின் படி வாதிகளும் என் தந்தையின் வாரிசுதாரர்கள் என்றால் சரியல்ல. சார் ஆட்சியரின் உத்தரவை எதிர்த்து நாங்கள் மேல் முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். அதற்குள் இந்த வழக்கில் நீதிமன்ற அழைப்பாணை எங்களுக்கு அனுப்பப்பட்டதால் மேல்முறையீடு செய்யவில்லை. 5–ம் பிரதிவாதி என் மாமியார். 6–பிரதிவாதி என் கணவரின் சகோதரர். வழக்கு சொத்தில் நானும், 1, 3 முதல் 6 பிரதிவாதிகளும் குடியிருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. நானும், 5 மற்றும் 6 பிரதிவாதிகள் மட்டுமே குடியிருந்து வருகிறோம். பி.சா.ஆ.4 அடமானப்பத்திரத்தில் என் தந்தையின் பெயர் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து என் தந்தையால் தனிப்பட்ட முறையில் வாங்கப்பட்ட சொத்து என்றால் இல்லை. என் அம்மாவின் நகைகளை விற்று கிடைத்த பணத்தில் நிலத்தை வாங்கி, வங்கியில் கடன் பெற்று என் அப்பா வீடு கட்டினார். என் அம்மாவின் நகைகளை விற்று கிடைத்த பணத்தில் நிலத்தை வாங்கியதாக என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. 5 மற்றும் 6 பிரதிவாதிகளுக்கு வழக்கு சொத்தை 1 முதல் 4 பிரதிவாதிகள் கிரையம் செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். வாரிசு சான்றிதழ் அடிப்படையில் சொத்து விற்கப்பட்டது என்றால் சரிதான். வாரிசு சான்றிதழை சார் ஆட்சியர் ரத்து செய்துவிட்டதால் 1 முதல் 4 பிரதிவாதிகள் 5 மற்றும் 6 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. கிரையம் வாங்கிய 5 மற்றும் 6 பிரதிவாதிகள் இன்று வரை அந்த சொத்தை சுவாதீனம் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதிகளை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு 5 மற்றும் 6 பிரதிவாதிகளுக்கு 1 முதல் 4 பிரதிவாதிகள் கிரையப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள ரூ.40லட்சம் கடன் யார் யாருக்கு கொடுக்க வேண்டுமென அந்த நபர்களின் பெயர்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் ரூ.24லட்சம் கடன் யார் யாருக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள ரூ.15லட்சம் கடன் யார் யாருக்கு கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என் தந்தைக்கு எதிராக வாதிகள் ஜீவனாம்சம் கேட்டு இராணிப்பேட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த விவரம் என் தந்தை இறந்த பிறகு எனக்கு தெரியும். அந்த ஜீவனாம்ச வழக்கு என் தந்தை இறப்பதற்கு முன்பே எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. நானும் என் தந்தையும் வசித்து வந்த முகவரிக்கு தான் அந்த வழக்கின் அறிவிப்பு அனுப்பப்பட்டதால் எனக்கு அந்த விவரம் தெரியும் என்றால் சரியல்ல. என் தாயாரை விசாரித்தால் உண்மையை சொல்லிவிடுவார் என்பதால் அவரை விசாரிக்காமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தாயார் வயதானவர் மற்றும் உடல்நிலை சரியில்லாதவர் என்பதால் அவரை விசாரிக்கவில்லை. ஜீவனாம்ச வழக்கு முறையாக விசாரிக்கப்பட்டு தான்

உத்தரவு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. வாதிகளும் என் தந்தையின் வாரிசுதாரர்கள் என்பதால் அவர்களுக்கு வழக்கு சொத்தில் 8–ல் 3 பங்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. எந்தவித மறுபயனும் இல்லாமல் 1 முதல் 4 பிரதிவாதிகள் 5 மற்றும் 6 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் வாதிகளின் பங்கு உரிமையை எந்தவிதத்திலும் பாதிக்காது என்றால் சரியல்ல. வாதிகள் கோரியபடி அவர்களுக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:–**</u> இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.